**சார்பு நீதிமன்றம், ஊத்தங்கரை**

**முன்னிலை:- திரு. பா. திருஞானசம்பந்தம், பி.ஏ., பி.எல்.,**

**சார்பு நீதிபதி, ஊத்தங்கரை.**

**2025-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 31-ம் நாள் வியாழக்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம் ஆடி 15-ம் நாள்**

**இடை நிலை மனு எண்.02/2023**

**இன்**

**அசல் வழக்கு எண்.20/2023**

சின்னதம்பி

... மனுதாரர் / வாதி

//எதிராக//

1. லிங்கம்மாள்
2. லிங்கம்மாள்
3. சதாசிவம்
4. சின்னதொட்லி
5. முருகன்
6. கோவிந்தராஜ்
7. வசந்தா

... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

**8.** சார்பதிவாளர், ஊத்தங்கரை

... உத்தேச பிரதிவாதி

இம்மனு என் முன்பாக கடந்த 18.07.2025-ம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M. சக்திவேல், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S. மூர்த்தி, அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாத உரைகளை

கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலணையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## உத்தரவு

இம்மனுவானது மேற்படி வழக்கில் ஊத்தங்கரை சார்பதிவாளரை தரப்பினராக சேர்க்க அனுமதி அளித்து தகுந்த உத்தரவிட வேண்டுமென்று உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 1 விதி 10(2) மற்றும் பிரிவு 151-ன் படி தாக்கல்.

## 1. மனுதாரரின் மனுவின் சுருக்கம்

மேற்படி வழக்கினை பிரதிவாதிகளுக்கு எதிராக பாகம் கோரியும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கில் 1 முதல் 7 பிரதிவாதிகளுக்கு சம்மன் சார்வு செய்யப்பட்டு மேற்படி வழக்கில் 1 முதல் 5 மற்றும் 7 பிரதிவாதிகள் தாவாவில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வேண்டி இந்நீதிமன்றத்தில் வாய்தா போடப்பட்டு நிலுவையில் இருந்து வரும் நிலையில் இந்த வழக்கில் 1, 2, 4 மற்றும் 7 பிரதிவாதிகள் 3, 5 பிரதிவாதிகளுக்கு கடந்த 21.06.2023-ம் தேதியில் ஊத்தங்கரை சார்பதிவகத்தில் மோசடியான முறையில் ஆவண எண். 4100/2023 படிக்கு விடுதலை பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளார்கள். அதனால் ஊத்தங்கரை சார்பதிவாளரை வழக்கில் தரப்பினராக சேர்த்து வழக்கை நடத்தினால் தான் வழக்கு முழுமை பெறும் என்பதால் ஊத்தங்கரை சார்பதிவாளரை வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டுமென்று இம்மனு தாக்கல்.

## 2. 5-ம்எதிர்மனுதாரரின் எதிருரையின் சுருக்கம்

எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரரது இம்மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல, இங்கு எதிர்மனுதாரர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் தவிர இதர மனு சங்கதிகள் யாவையும் மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர், 1, 2, 4 மற்றும் 7 பிரதிவாதிகள் மனு சொத்தில் தங்களுக்குரிய பாகத்தினைத்தான் 3, 5 பிரதிவாதிகளுக்கு கடந்த 21.06.2023-ம் தேதியில் ஊத்தங்கரை சார்பதிவகத்தில்

ஆவண எண்.4100/2023 படிக்கு விடுதலைப் பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளார்கள். அதனை மோசடியான பத்திரம் என குறிப்பிட மனுதாரருக்கு உரிமையும் இல்லை. அதனால் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுதாரரின் மனு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட வேண்டிய ஒன்றாகும். வழக்கில் வெற்றி பெற முடியாது என்பதை நன்குணர்ந்த மனுதாரர் இந்த எதிர்மனுதாரர்களை வீணாக அலைகழிக்கவும், இந்த எதிர்மனுதாரர்கள் எவ்வித நலனையும் அடைந்துவிடக்கூடாது என்ற கெட்ட எண்ணத்திலும் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளதால் மனுதாரரின் மனு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

3. மனுதாரர் தரப்பு மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித சாட்சியமோ, சான்றாவணமோ முன்னிலைப்படுத்தவில்லை.

4. இம்மனுவின் தீர்மானிக்க கூடிய பிரச்சனை யாதெனில் - இம்மனு அனுமதிக்க கூடியதா? இல்லையா? என்பதே ஆகும்

5. <u>தீர்வு</u>

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் மேற்படி வழக்கினை பிரதிவாதிகளுக்கு எதிராக பாகம் கோரியும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி வழக்கில் 1 முதல் 7 பிரதிவாதிகளுக்கு சம்மன் சார்வு செய்யப்பட்டு மேற்படி வழக்கில் 1 முதல் 5 மற்றும் 7 பிரதிவாதிகள் தாவாவில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வேண்டி இந்நீதிமன்றத்தில் வாய்தா போடப்பட்டு நிலுவையில் இருந்து வரும் நிலையில் இந்த வழக்கில் 1, 2, 4 மற்றும் 7 பிரதிவாதிகள் 3, 5 பிரதிவாதிகளுக்கு கடந்த 21.06.2023-ம் தேதியில் ஊத்தங்கரை சார்பதிவகத்தில் மோசடியான முறையில் ஆவண எண். 4100/2023 படிக்கு விடுதலை பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளார்கள் என்றும், அதனால் ஊத்தங்கரை சார்பதிவாளரை வழக்கில் தரப்பினராக சேர்த்து வழக்கை

நடத்தினால் தான் வழக்கு முழுமை பெறும் என்பதால் ஊத்தங்கரை சார்பதிவாளரை வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டுமென்று எடுத்துரைத்தார். ஆனால் கற்றறிந்த எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் 1, 2, 4 மற்றும் 7 பிரதிவாதிகள் மனு சொத்தில் தங்களுக்குரிய பாகத்தினைத்தான் 3, 5 பிரதிவாதிகளுக்கு கடந்த 21.06.2023-ம் தேதியில் ஊத்தங்கரை சார்பதிவகத்தில் ஆவண எண்.4100/2023 படிக்கு விடுதலைப் பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளார்கள் என்றும், அதனால் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுதாரரின் மனு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட வேண்டிய ஒன்றாகும் என்றும் எடுத்துரைத்தார். இருதரப்பு வாதுரை மற்றும் சாட்சிய, சான்றாவணங்களை பரிசீலிக்கையில் இவ்வழக்கு பாகப்பிரிவினைக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கு நிலுவையில் உள்ளபோது 1, 2, 4 மற்றும் 7 பிரதிவாதிகள் 3, 5 தங்களது பாகத்தை பொறுத்து விடுதலை பத்திரம் எழுதி கொடுத்துள்ளதாகவும், அது உத்தேச தரப்பினர் அலுவலகத்தில் பதிவு செய்யபட்டுள்ளதாலேயே அவரை அவசர தரப்பினராக சேர்க்க கோருவது ஏற்கத்தக்கது அல்ல. மேலும் வழக்கு நிலுவையில் உள்ள போது ஏதேனும் பரிமாற்றங்கள் ஏற்பட்டால் அது சொத்துரிமை மாற்று சட்டம் பிரிவு 52-ஐ உள்ளடக்கும் என்பதாலும் சார்பதிவாளரை இவ்வழக்கில் உத்தேச தரப்பினராக சேர்க்க அவசியமில்லை என இந்நீதிமன்றம் கருதுவதாலும், இம்மனுவை தள்ளுபடி செய்ய முடிவு செய்கிறது.

இறுதியாக இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக உரைக்கப்பட்டு அவரால் கணிணியில் வடிவமைக்கப்பட்டதை என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 31.07.2025-ம் தேதி என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஓம்/- திரு. பா. திருஞானசம்பந்தம், பி.ஏ., பி.எல்.,
சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.

**1. மனுதாரர் தரப்பு சான்றாவணம்: இல்லை**

**2. எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்: இல்லை**

ஓம்/- திரு. பா. திருஞானசம்பந்தம், பி.ஏ., பி.எல்.,
சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.